www.Kanchikalvi.com www.TnpscExamOnlineResult.blogspot.in

X-FP T2-2

Reg No.

# முழுப் பாடத்திட்டத் தேர்வு – 2

## பத்தாம் வகுப்பு

## தமிழ் இரண்டாம் தாள்

(இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)

நேரம்: 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 100

அறிவுரை: 1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.
iii) வினா எண் 38க்கு என வங்கியில் பணம் செலுத்தும் படிவம் தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.

### பிரிவு - I (மதிப்பெண்கள் - 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெழுதுக. 5x1=5

1. பல்+தீது என்பது ................ எனப் புணரும்
அ) பல்தீது ஆ) பஃறீது இ) பலத்து

2. 'மாடு' என்னும் சொல் .................. ஆகும்.
அ) உயர்திணைப் பொதுப் பெயர் ஆ) அஃறிணைப் பொதுப் பெயர்
இ) விரவுப்பெயர்

3. பாலை நிலத்திற்குரிய பறவைகள் ..................
அ) கிளி, மயில் ஆ) நாரை, அன்னம் இ) புறா, பருந்து

4. பாடாண்திணை என்பது ................ கூறுவது
அ) ஆண்மகனின் ஒழுகலாறுகள் ஆ) போரின் தன்மைகள்
இ) பெண்மகளின் ஒழுகலாறுகள்

5. 'உலகு' என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு ............. ஆகும்.
அ) நாள் ஆ) காசு இ) பிறப்பு

### பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

6. ஓர் எச்ச வினை .................. கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.
7. 'மலரன்ன சேவடி' இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ................
8. 'ஆடத் தெரியுமா?' என்னும் வினாவிற்குப் 'பாடத் தெரியும்' எனக் கூறுவது ................ விடை.
9. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தான் வருவது ..................... ஆகும்.
10. செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது ..................அணி ஆகும்.

### பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்க: 10x1=10

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. **உவமையை உருவகமாக மாற்றுக: மலர்ப்பாதம்**
13. **தொகைச் சொல்லை விரித்தெழுதுக. ஐம்பொறி.**

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

www.Kanchikalvi.com www.TnpscExamOnlineResult.blogspot.in



14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை, பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

15. நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன. கலவைத் தொடராக மாற்றுக.

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.

கைத்தொழில் ஒன்றை கற்று கொள்.

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.

ஐப்பசி மாசம் அடமழை எம்பாங்க.

18. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

அனைவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.

19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.

கம்பர் கம்பராமாயணம் என்னும் காவியம் படைத்தார்

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

தாளம் போடுதல்

## பிரிவு - II (மதிப்பெண்கள் - 10)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க. 5x2=10

21. ஐகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
22. வினைமுற்றைக் கொண்டு எவ்வெவற்றை அறியலாம்?
23. மரவேர் - சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக: தெளிந்தோம்
25. அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
26. மதில்போர் பற்றிய புறத்திணைகள் யாவை?
27. கருப்பொருள் என்பது யாது?

## பிரிவு - III (மதிப்பெண்கள் - 50)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. 2x5=10

28. கீழே உள்ள பாடலில் பயின்று வரும் பாவகையைக் குறிப்பிட்டு அதன் இலக்கணம் எழுதுக.

பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு உலகு புரப்பதுவே.

29. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

(அல்லது)

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக:

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

**பகுதி - 2**

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க: 2x5=10

31. 'குறட்டை ஒலி' கதையில் இடம்பெறும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.
32. அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்துக் கட்டுரை எழுதுக.
33. அகழாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**பகுதி - 3**

34. அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

பாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே. பட், நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே. வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கேன்.

*ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றி எழுதுக.*

47, 32, 56, 298

35. அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

Food is essential for all living beings. Without food man cannot live long. Everyman has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and he will fall ill. So, everyman has to eat enough food to live.

*ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.*

1) Haste makes waste.
2) Covet all lose all.
3) Slow and steady wins the race.
4) A friend in need is a friend indeed

**பகுதி - 4**

கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க: 1x5=5

36. *அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமானத் தலைப்பைத் தருக.*

இரவு பன்னிரண்டு மணியளவில் கண்ணன் தன் வீட்டில் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தான். மாடியில் யாரோ ஏறிக் குதிப்பது போல் சத்தம் கேட்டது. அந்த நேரத்தில் மின்சாரமும் போய்விட்டது. அப்போது ..........................

**(அல்லது)**

**ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.**

மழை *(அல்லது)* பள்ளி

**பகுதி - 5**

37. *கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் எவையேனும் ஐந்தினை எடுத்தெழுதுக:* 1x5=5

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும் - பாரதியார்.

www.Kanchikalvi.com www.TnpscExamOnlineResult.blogspot.in



**பகுதி - 6**

38. கொடுக்கப்பட்டுள்ள வங்கியில் பணம் செலுத்தும் படிவத்தை நிரப்புக 1x5=5

**பகுதி - 7**

39. அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. 3+2=5

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகிறான். காரணம் கேட்டால் உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

i) பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?

ii) நாம் எப்படி நண்பர்களோடு நட்பு கொள்ள வேண்டும்?

iii) இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

இரண்டு நாள் பெய்தபெருமழையின் விளைவாக அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் கதிரவன் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள் பெற்றோருக்குத் தெரிந்தால், தன்னைக் கண்டிப்பார்கள்; திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்றும் அவன் நினைக்கிறான்.

1) இந்நிலையில் கதிரவன், தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?

2) கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

*பிரிவு - IV (மதிப்பெண்கள் - 20)*

**பகுதி - 1**

கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க: 1x10=10

40. அ) நும் ஊரில் சாலையில் மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரிய தலைவருக்கு விண்ணப்பம் வரைக.

**(அல்லது)**

ஆ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

**பகுதி - 2**

கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக: 1x10=10

41. அ) சுற்றுச்சூழல் சீர்கேடு - காற்றுமாசு - நீர்மாசு - நிலம் மாசு - ஒலி மாசு - தவிர்க்கும் முறைகள் - மாணவர் பங்கு.

***(அல்லது)***

ஆ) பெண்கல்வி - பெண்ணுரிமை - சமுதாயத்தில் பெண்கள் நிலை - பெண்களுக்குச் சொத்துரிமை- பெண்விடுதலை - மணக்கொடை - பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்.

* * * * * *

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com